**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.182/2024 PW.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணவேல் | த–பெ /க.பெ. | சமுத்திரவேலு |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி காரைக்குடி | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026**

---

**02.04.2026**
**முதல் விசாரணை:**

1) நான் கடந்த 8 ஆண்டுகளாக மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். காரைக்குடி கரூர் வைஸ்யா வங்கியில் தற்போது கடந்த 1 வருடமாக பணி செய்து வருகிறேன். நான் தற்போது பணிபுரியும் கரூர் வைஸ்யா வங்கியில் இந்த வழக்கின் எதிரியான திரு. செய்யது இப்ராகிம் என்பவருக்கு சொந்தமான proprietor of Chettinad zig zag என்ற நிறுவனத்திற்கான வங்கி கணக்கினை வைத்துள்ளார். மேற்படி வங்கி கணக்கிற்கான வங்கி பரிவர்த்தனைக்கு முழு அதிகாரமும் செய்யது இப்ராகிமுக்கு உண்டு என்றால் சரிதான். மேற்படி எதிரியின் வங்கி கணக்கிற்கான பரிவர்தனை 01.01.2024 முதல் 02.05.2024 ற்கான விபரங்கள் என்னிடம் உள்ளது. **மேற்படி 01.01.2024 முதல் 02.05.2024 வரையிலான வங்கி கணக்கு பரிவர்தனை ஆவணம் ம.சா.ஆ.10 ஆகும்.** ம.சா.ஆ.1 ஆவணமான காசோலையானது எங்கள் வங்கியால் எதிரிக்கு வழங்கப்பட்டது.

2) புகார்தாரர் எதிரி கொடுத்த காசோலையை அவரது வங்கியில் வசூலுக்கு

தாக்கல் செய்யும்போது எங்கள் வங்கியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா என்றால் கொண்டுவரப்பட்டது. எதிரி மேற்படி காசோலையை நிறுத்தி வைக்கக்கோரி கடிதம் அளித்திருந்தால் மேற்படி கடிதமும் எங்கள் வங்கி ஆவணங்களில் சேர்க்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி புகார்தாரர் வழக்கு காசோலையை தாக்கல் செய்த அன்று எதிரியின் வங்கி கணக்கில் போதிய தொகை இல்லை என்றால் சரிதான். எதிரி எங்கள் வங்கியில் அவர் அளித்த காசோலையை நிறுத்தி வைக்குமாறு கடிதம் எதுவும் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் வங்கி பரிவர்த்தனை பற்றியும் எதிரியின் பிற விபரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை</u>** –இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.02 16:55:54 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)